**செய்தி வெளியீடு எண்: 743** **நாள்: 11.12.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை மேம்படுத்துவதற்கும், சுற்றுச் சூழலை பேணிப் பாதுகாப்பதற்கும், பசுமைப் போர்வையை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

2001-2006 ஆட்சிக் காலத்தில், துவங்கப்பட்ட தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், 39 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில், 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும் என்றும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களை பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்து இருந்தார்கள்.

இதன்படி, முதற்கட்டமாக 6 கோடியே 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில், கடலூர், கரூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 6,475 எக்டேர் பரப்பில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டத்தினை நடப்பாண்டில் செயல்படுத்தவும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரத் தோட்டங்களை பராமரிப்பதற்கென 2 கோடியே 97 லட்சத்து 88 ஆயிரம் ரூபாயினை விடுவித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டின் தேக்கு மரத் தேவை பூர்த்தி செய்யப்படுவதுடன், ஆறு மற்றும் கால்வாய் கரைப் பகுதிகளில் மண் அரிமானம் தடுக்கப்பட்டு, அவற்றின் கரைப் பகுதிகள் பலப்படுத்த வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்:- 11.12.2012.